**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 140 /2018**

PW 1 – சுப்ரமணியன் த/பெ ஆறுமுகம்
நாள் – 04.12.2023.

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி :</u>**

இடை மனு எண் 3/2023 நாள் 28.11.2023-ம் தேதிய இந்நீதிமன்ற உத்தரவுப்படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதன்மை விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

09.07.2002-ம் தேதி பாக பாத்திய விடுதலை அக்ரிமென்ட் பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.-4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (பிரதிவாதி தரப்பில் மேற்படி ஆவணமானது போதிய முத்திரைத்தாளில் எழுதப்படாததாலும், பதிவு சட்டப்படி பதிவு செய்யப்படாத காரணத்தினாலும் குறியீடு செய்ய இயலாது என ஆட்சேபணை செய்யப்பட்டது, வாதி தரப்பில் மேற்படி ஆவணமானது ஒப்பந்த பத்திரம் என்பதால் பதிவு அவசியம் இல்லை என விளக்கம் அளிக்கப்பட்டது, மேற்படி ஆட்சேபணை மற்றும் விளக்கமானது தீர்ப்பின்போது பரிசீலனைக்கு ஏற்றுகொள்ளப்படும்).

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.